# பொன் மொழிகள்

***முனைவர் ஜே.ரா. ஹேனா வில்லி***
உதவிப் பேராசிரியை தமிழ்த்துறை
போப் கல்லூரி சாயர் புரம்

**மலர்: 11**

**சிறப்பிதழ்: 2**

**மாதம்: ஜூலை**

**வருடம்: 2023**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS2i1-July.6386

***முன்னுரை***

*கிறித்தவ மதத்தின் இறைமகனாம் இயேசு கிறிஸ்து விண்ணுலகை விட்டு மண்ணுலகை அடைந்து, தேவனின் திட்டம் நிறைவேற தன்னை அர்ப்பணித்ததின் விழைவே சிலுவை மரணம். சிலுவை மரணம் என்பது ஒரு சாபத்தின் குறியீடு. அக்காலத்தில் தவறிழைப்பவர்களை சிலுவையில் அறைவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். இறை மகன் இயேசு எவ்விதத் தவறும் செய்யவில்லை. ஆனால் அவருக்கு நியமிக்கப்பட்டது சிலுவை மரணம் காரணம் தனது தந்தையின் சொல்லுக்கு கீழ்ப்படிந்து உலக மக்களின் பாவத்தை தன் மேல் ஏற்றுக் கொண்டதன் விளைவாகும். அச்சிலுவையின் பாடுகள் மத்தியிலும் பிதாவை நோக்கி வேண்டுவதைக் காண்கிறோம். அவ்வேண்டுதலே ஏழு வார்த்தைகளாக வெளிவருகின்றன. அவ்வார்த்தைகளை பொன் மொழிகள் என்றால் மிகையாகாது. அவ்வார்த்தைகளைக் குறித்தாய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

**கல்வாரி மலை**

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவானவர் மனிதர்களின் பாவங்களை சுமந்து தீர்க்கிற தேவாட்டுக்குட்டியாகத் திகழ்ந்தார். ஆடானது தான் வெட்டப்படக் கொண்டு போகும் போது சத்தமிட்டு ஆர்ப்பரிக்காது அமைதி காக்கும். அது போல் இயேசுவானவரும் தன் மேல் குற்றமில்லாத போதும் வாய் திறவாது அவர்கள் பின்னே சென்றார்.

அவர் ஆட்டைப் போல அடிக்கப்படுவதற்குக் கொண்டு போகப்பட்டார். மயிர்க்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டுக்குட்டியைப்போல அவர் தமது வாயைத் திறவாதிருந்தார் அப்போஸ்தலர் 8-32 என்றுபரிசுத்த வேதாகமத்தில் வாசிக்கிறோம்.

**திருமொழிகள்**

இயேசு உரைத்த உரைமொழிகள் ஏழாகும்.

1. பிறரை மன்னிக்கும் குணம்
2. இரட்சிக்கும் குணம்

இன்னலே புரிவார்க்கொன்று எழும் வலக் கள்ளர்க் கொன்று அன்புறும் அன்னைக் கொன்று ஆத்துமப் பாடலொன்று
மன்னுயிர் மீட்பிற் கொன்று மாண்கடன் முடித்தற் கொன்று
தன்னுயிர் நீத்தற் கொன்று தற்பரன் பொழி ஏழாமே

1. அன்பின் ஏக்கக் குணம்
2. அங்கலாய்க்கும் குணம்
3. பணி நிறைவுச் செய்யும் குணம்
4. ஆவியை ஒப்புவிக்கும் குணம் ஆகியவை ஆகும்.

**சிலுவைப்பாடு**

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து சிலுவைப் பாட்டினை ஏற்றுக் கொண்டதற்குக் காரணம் உண்டு. வானத்தையும் பூமியையும் படைத்த தேவன் மனிதர்களைப் படைத்ததற்காக மனஸ்தாபப் பட்டார். ஏனெனில் மனிதர்கள் அவர் சித்தத்தின் படி வாழாது மனம் போன போக்கில் வாழ்ந்ததே காரணமாகும்.

"உலகத்தின் பாவத்தைச் சுமந்துத் தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" யோவான் 1-29 உலகப் பாவக் கறைகளால் சிக்குண்டு உழன்றுத் தவிக்கும் மக்களை மீட்டெடுப்பதற்காகவே தன்னுயிரை இன்னுயிராக ஈந்தார். மேலும் நம்முடைய பாடுகள் மற்றும் துக்கங்களை ஏற்றுக் கொண்டு நமக்கு சமாதானத்தை உண்டு பண்ண சிலுவைப்பாட்டினை ஏற்றுக் கொண்டார்.

**எண் ஏழு**

எண் ஏழானது பரிபூரணமான எண் என்பர். அவ் வெண்ணானது, பரிசுத்த வேதாகமத்தில் பல இடங்களில் பரவலாகப்பரவிக் கிடக்கிறது.

*1. ஏழு பழி -ஆதியாகமம் 4-15,*
*2. ஏழு நாள் ஆதியாகமம் 7-4,10,8-10,12.*
*3. ஏழு பெண்ணாட்டுக்குட்டி ஆதியாகமம் 21-28,*
*4. ஏழு வருஷம் -ஆதியாகமம் 29-20*
*5. ஏழு விசை ஆதியாகமம் 33-3*
*6. ஏழு கதிர்கள் ஆதியாகமம்41-6*
*7. ஏழு தரம் யாத்திராகமம் 4-17*
*8. ஏழு வாரங்கள்லே வியராகமம் 23-15,*
*9. ஏழு பசுக்கள் ஆதியாகமம் 41-18*
*10. ஏழு அகல் விளக்கு யாத்திராகமம் 25-37,*
*11. ஏழு கலசம் வெளி 21-9, வெளி 17-1*
*12. ஏழு மலை வெளிப்படுத்தல் 17-9*
*13. ஏழுவாதை வெளிப்படுத்தல் 15-6*
*14. ஏழு தூதர் வெளிப்படுத்தல் 15-1*
*15. ஏழு எக்காளம் வெளிப்படுத்தல் 8-6*
*16. ஏழு சபை வெளிப்படுத்தல் 1-4*
*17. ஏழு குத்து விளக்குகள் வெளிப்படுத்தல் 1-12.*
*18. ஏழு கோத்திரங்கள் யோசுவா 18-2,*
*19. ஏழு பங்கு யோசுவா 18-6.*
*20. ஏழு மாதம் 1சாமுவேல் 6-1,*
*21. ஏழு பேர் 11 சாமுவேல் 21-6*
*22. ஏழு முழம் 1 ராஜாக்கள் 6-6*
*23. ஏழு வழி உபாகமம் 28-7*
*24. ஏழு கொம்பு யோசுவா 6-4,*
*25. ஏழு ஆசாரியர் யோசுவா 6-8*
*26. ஏழு எக்காளங்கள் யோசுவா 6-13*
*27. ஏழு பங்கு யோசுவா18-5*
*28. ஏழு வயது நியாயாதிபதிகள் 6-25 11 இராஜாக்கள் 11-21*
*29. ஏழு அகணிநார் நியாயாதிபதிகள் 16-7,*
*30. ஏழு குமாரத்திகள் யாத்திராகமம் 2-16, ஏழு விளக்குகள் எண்ணாகமம் 8-2*
*31. ஏழு பலிபீடங்கள் எண்ணாகமம் 23-1*
*32. ஏழு காளைகள் எண்ணாகமம் 28-11*
*33. ஏழு ஆட்டுக்குட்டிகள் எண்ணாகமம் 29-4*
*34. ஏழுதரம் தும்மி 11 இராஜாக்கள் 4-35*
*35. ஏழுதரம் முழுகி 11 இராஜாக்கள் 5-14*
*36. ஏழு மந்திரிமார் எஸ்றா 7-16*
*37. ஏழுபிரதானிகள் எஸ்தர் 1-11*
*38. ஏழு அருவருப்புகள் நீதிமொழிகள் 26 -25,*
*39. ஏழுபிள்ளைகள் எரேமியா 15 - 9 .*
*40. ஏழு படிகள் எசேக்கியேல் 40-22,*
*41. ஏழு முழம் எசேக்கியேல் 41-3,*
*42. ஏழு காலங்கள் தானியேல் 4-16, 25, 32.9-25*
*43. ஏழு மேய்ப்பர் மீகா 5-5,*
*44. ஏழு கண்கள் சகரியா 4-10.*
*45. ஏழு ஆவி மத்தேயு 12-45*
*46. ஏழு அப்பங்கள்மத்தேயு15-34*
*47. ஏழு கூடை மத்தேயு16-10,*
*48. ஏழுபிசாசுகள் லூக்கா 8-2*
*49. ஏழு மைல்கள் லூக்கா 24-13,*
*50. ஏழு ஜாதிகள் அப்போஸ்தலர் 13-19*
*51. ஏழு நட்சத்திரங்கள் வெளிப்படுத்தல் 1-16*
*52. ஏழுசபைகளின் தூதர்கள் வெளிப்படுத்தல் 1-20*
*53. ஏழு அக்கினி தீபங்கள் வெளிப்படுத்தல் 4-5.*
*54. ஏழு முத்திரைகள் வெளிப்படுத்தல்5-5.*
*55. ஏழுகொம்புகள் ஏழு கண்கள் வெளிப்படுத்தல் 5-6*
*56. ஏழு கண்கள் வெளிப்படுத்தல் 8-2*
*57. ஏழு தூதர்கள் வெளிப்படுத்தல் 8-6,*

*58. ஏழு தலைகள் வெளிப்படுத்தல் 13-1,*

*59. ஏழு வாதை வெளிப்படுத்தல் 15 -1*

*60. ஏழு மலைகள் வெளிப்படுத்தல் 17-9,*

*61. ஏழுகலசங்கள் வெளிப்படுத்தல் 21-9*

இவ்வாறாக ஏழு என்ற எண்ணானது பல வார்த்தைகளை உள்ளடக்கி அமைந்துள்ளது. இன்னும் பல இடங்களில் இதே வார்த்தைகள் காணப்படுகின்றன.

## மன்னிப்பு

மன்னிப்பு என்பது ஒருவரையொருவர் மன்னிப்பதாகும். அதாவது ஒருவர் பேரில் ஒருவருக்கு குறை இருக்குமேயானால் அதனைப் பெரிது படுத்தாது அதனை விட்டுவிடுதல் ஆகும். இப்பண்பினைச் சொல்வது எளிது. கடைப்பிடிப்பது என்பது சாதாரண காரியம் அல்ல சற்றுக் கடினமானதாகும். அப்பண்பினைத் தான் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து வாழ்ந்து காட்டியுள்ளார்.

***ஈடுசெய் இன்பத் தாலே ஏழையின் கோல மாகி***
***காடுறு பாவா டேபோல் காவினை தன்மீ தேற்று***
***பாடுறும் போது மீசன் பாசமும் நீசர் காண***
***நீடிரு ளூடே ஜோதி நேரமன் னிப்பீ***
***ரென்றார் பா . எண் -4***

இயேசுவை சிலுவையில் அறையும் போது தன்னை அடித்தவர்களை காறி உமிழ்ந்தவர்களைப் பார்த்து அவர்களுக்காக தேவனிடம் மன்றாடுகிறார்.

பிதாவே இவர்களுக்கு மன்னியும் தாங்கள் செய்வது இன்னதென்று அறியாதிருக்கிறார்கள். என்று தன்னை காயப்படுத்தியவர்களுக்காக வேண்டுவதைப் பாாக்க முடிகிறது. கண்ணுக்குக் கண் பல்லுக்குப்பல் என்று பதில் செய்யும் இவவுலகில் மன்னித்தல் அவசியம் என்பதை வெளிப்படுத்துகிறார்.

***இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண***
***நன்னயம் செய்து விடல்***

என்ற குறளானது இங்கு நினைவுக் கூறத்தக்கது. மனித வாழ்க்கையில் மனக்கசப்பு இருக்குமென்றால் நிம்மதி இராது. மன அழுத்தம் அதிகரிக்கும். பல்வேறு இன்னல்களுக்கு ஆட்பட வேண்டியிருக்கும் ஆகவே மன்னிப்பை அருளி மனகசப்பை நீக்கி நிம்மதியுடன் வாழ்வதே சிறந்ததாகும்.

## இரட்சிப்பு

இரட்சிப்பென்பது பாவ மன்னிப்பைப் பெறுதலாகும். அப்பாவ மன்னிப்பை எங்கும் சென்று பெற இயலாது விலைக் கொடுத்தும் கிடைக்காதது. அவருடைய இரத்தத்தினாலே விடுதலை. இயேசுவின் சிலுவை மரணத்தினால் பாவத்திலிருந்து விடுதலைப்பெற்றோம். பாவ மன்னிப்பின் நிச்சயமே இரட்சிப்பு.

***நீ கிறிஸ் தேசெனில் நின்னுட னெம்மை***
***ஆகிற தென்னுமுன் ஆற்றலினாலே***
***சாகிற தின்முனம் சாலமீ னென்றான்***
***போகிற தெங்கனும்போதமிலாதன்[2]***
***பா.எண் 3***

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை சிலுவையில் அறையும் போது அவருக்கு இரு மருங்கிலும் கள்வர்களை அறைந்தனர். இருவருமே தவறிழைத்து தண்டிக்கப்படுபவர்கள். அதில் ஒருவன் தன் தவறினை நினையாது இயேசுவை நோக்கி, நீர் உம்மையும் எங்களையும் இரட்சியும் என்கிறான்.

***ஆண்டவர் நீரதி அற்புத ராஜ்யம்***
***ஆண்டிடுங் காலளி யாயடி யேனை***
***மீண்டுநி னைத்திடு மென்றுப ணிந்து***
***வேண்டினன் விண்ணவர் வேந்திவர் என்றே***
***பா.எண் 8***

மற்ற கள்வனோ இறைவனிடம் பயப்பக்தியுள்ளவனாய் ஆண்டவரே நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும் போது என்னை நினைத்தருளும் என்று வேண்டிக் கொள்கிறான்.

***இன்றுநீ ஒப்புக் னுட னேபர தீசில்***
***ஒன்றிடு வாயென ஓதின ரீசன்***
***நன்றெதிர் நாடிட நல்கின ரன்றே***
***இன்றிசைத் தண்ணலை ஏத்திடு வோமே***

அதற்கு இயேசு, அக்கள்வனை நோக்கி இன்றைக்கு நீ என்னுடனே கூட தான் இருக்கும் இடத்திலிருப்பாய் என

வாக்களிக்கிறார். இவ்விரு கள்வரில் ஒருவன் அவரை விசுவாசியாமல் இகழ்ந்து பேசினான். நித்திய ஜீவனை இழந்து போனான். மற்றவனோ தன் தவறினை உணர்ந்து பாவமன்னிப்பின் நிச்சயத்தை பெற்றுக் கொண்டவனாய் நித்தியத்திற்குள் பிரவேசித்தான். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நமக்கென்று ஆயத்தம் பண்ணி வைத்திருக்கும் நித்தியத்திற்குள் பிரவேசிப்பதற்கு பாவ மன்னிப்பின் நிச்சயம் அவசியமாகிறது.

## ஒப்படைப்பு

ஒப்படைப்பு என்றால் ஒரு பொருளை ஒருவரிடம் கொடுத்து பத்திரப்படுத்தி வைக்க அறிவுறுத்தல் ஆகும். இங்கு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தனது தாயாரை தனது சீஷனிடம் ஒப்படைக்கிறார்.

***எனவேங் கினளே எதிர்யோ கனனை***
***இறைகாண் டரவே அருளால்***
***அனைக்கா தரவே தருமா றகமே அளியாய்***
***விழிநோக் களித்ததும மனதாய் ஸ்திரியே***
***இதுவுன் மகன்சீ டயிதோ நினனை எனவே***
***இனமாண் புடனே இறைமான் புளதால்***
***இனிதாற் றினர்தங் கடனே***

***பா.எண் 5***

இவ்வுலக வாழ்க்கையில் பிள்ளை மனம் கல்லு பெத்த மனம் பித்து என்பர். உலகத்தில் ஆண்பிள்ளையை பெற்றோர், தனது வயோதிபக் காலத்தில் தன் மகன் நன்றாய் பராமரித்துக் கொள்வான் என நம்பி வாழ்கின்றனர் ஆனால் மகனோ குறிப்பிட்ட வயது வந்தவுடன் தாய் தந்தையரை முதியோர் இல்லத்தில் இணைத்து விடுகிறான். இதனைக் கண்டு மனம் பொறாத இயேசுவானவர் தனது தாயாரை தனது அருமை சீடனானவனிடம் ஒப்படைத்து ஒரு முன் மாதிரியான வாழ்க்கை வாழ்ந்து காட்டியுள்ளார்.

## தவிப்பு

தவிப்பு மனதாலோ அல்லது உடலாலோ அடையும் உணர்வாகும். இயேசு சிலுவையில் அறையப்பட்ட வேளையில் என் தேவனே என் தேவனே ஏன் என்னை கைவிட்டீர் என அங்கலாய்கிறார்.

***தாம் விழையும் தாதைமுகம் சாலமறைவாக***
***தேம்பியேஎன் தேவனேஎன் தேவனேநீர் என்கை***
***தாம்விடுத்த தேதெனவே சாற்றினராற்றாதே***
***கூம்பிடும் வெய் யோன்மறையக் கோலமரைப் பவே***

***பா.எண் 5***

இயேசுவானவர் தனது தந்தையின் திட்டத்தை நிறைவேற்றவே இப்பூவுலகம் வந்தார். தந்தையோடுள்ள உறவிலே விரிசல் ஏற்படுவதை அவர் விரும்பவில்லை.இவர் உலக மக்களின் பாவங்களை சுமந்ததின் விளைவால் பாவத்தை பாராத சுத்தக்கண்ணராகிய தேவன் ஒரு இமைப்பொழுது தன்னை மறைத்தார். அதனைக் கூட பொறுத்துக் கொள்ள முடியாமல் முறையிடுகிறார். தந்தை-மகன் உறவானது நல்லுறவாக அன்புருவாக அமைதல் வேண்டும் என்பதை அறிவுறுத்துகிறார்.

## தத்தளிப்பு

தத்தளிப்பு - மனம் கலங்குதல் என்பது பொருளாகும். இயேசுவை சிலுவையில் அறைந்து பல மணி நேரம் சிலுவையில் தொங்கினார். அப்போது அவர் பேசிய ஐந்தாம் வார்த்தையே தத்தளிப்பின் குரலாகும். சிலுவை சுமந்து வருகையில் அவர் உடலில் உள்ள நீர்ச் சத்தெல்லாம் வெளியேறிவிட்டது. அதினிமித்தமே தாகமாயிருக்கிறேன் என்று மொழிகிறார். அங்கு நின்ற சேவகர்கள் அவருக்கு கசப்புக் கலந்த காடியைக் குடிக்கக் கொடுத்தனர்.

**நுவல்வே னெனினே நுமக் கூறிடுமே**
**நவஜீ வதணீர் எனவே நவின்றேர்ா**
**பவநாரி யர்க்குப் பரிவா யளித்தார்**
**கவன்றா கமீட்ரி பதற்கே கனிந்தே**

***பா.எண் 7***

அத்தாகத்திற்கு பலரும் பல பொருள் கூறுகின்றனர். 1. சரீர தாகம் 2. ஆத்ம தாகம். சரீர உபாதைகளால் எழும் தாகமே சரீர

தாகம். ஆத்மதாகமானது மனிதர்களை நித்தியத்திற்குள் அழைத்துச் செல்வதாகும். ஆண்டவராகிய இயேசுவை ஏற்றுக் கொண்டவர்கள் இவ்வுலக மாந்தர்களை அவரண்டை அழைத்து வர வேண்டி அழைப்பு விடுக்கிறார்.

### முடிப்பு

முடிப்பு என்றால் முடிந்தது என்று அர்த்தம். சரீரத்தின் வேதனையில் எல்லாம் முடிந்தது என்றார். விண்ணகம் விட்டு மண்ணகம் வந்து தான் நிறைவேற்றும் படியாக பிதா தனக்களித்த பொறுப்புகளை நிறைவேற்றி முடித்தார்.

***ஆறா மின்மொழி ஆறுதல் தேறுத லென்பார்***
***ஈறாயிங்கதை யேசுவும் பேசிய தில்லை***
***பேறா யிங்கவர் பெற்றிடு வெற்றிவி ளக்கும்***
***ஆறா மென்னமு டிந்ததென் றந்தணன் சொற்றார். பா.எண் 2***

தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை என்பர். தந்தை சொல்லுக்கு மறுப்பு தெரிவிக்காது அவர்தம் வார்த்தைக்கு செவிக் கொடுத்து வாழ்வதே சாலச் சிறந்ததாகும்.

### ஒப்புவிப்பு

ஆறு வார்த்தைகளை பொழிந்தருளியவர் சரீர களைப்பின் நிமித்தம் தனது ஆவியை அவரிடத்தில் ஒப்புவிக்கிறார்.

***ஏழுமொழி யின்முதலும் ஏழுமொழியின் கடையும்***
***மூழுமன்பி னால்பிதாவே என்றறிவால் முன்மொழிந்தார்***
***மாளியல் பா லேஉடலை மானிலத்தி லேவிடுத்து***
***வளியல்பா லாவியினை வானவன்கைக் கொப்புவித்தார்***

***பா.எண்.3***

இயேசு சிலுவையில் மொழிந்தது ஏழு வார்த்தைகளாகும். ஏழாம் வார்த்தையில் தனது உடல் பொருள் ஆவியை தனது பிதாவிடம் ஒப்படைக்கிறார். முதலாவது ஏழாவது வார்த்தையில் தனது பிதாவை முன்னிறுத்தியுள்ளார். ஏழாவது வார்த்தையிலும் பிதாவை முன்னிறுத்தியுள்ளார். உலக வாழ்வின் பல்வேறு இடர்பாடுகளின் மத்தியில் மனிதர்களை நாடாது இறைவன் பாதத்தில் அமர்ந்திருப்பதையே தெரிந்தெடுத்து வாழ அழைக்கப் படுகின்றோம்.

### முடிவுரை

இயேசு அருளிய பொன்மொழிகள் ஏழும் சிறப்பானவை வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டியவை. ஒவ்வொரு வார்த்தையும் கருத்தாழம் மிக்கவை. செறிவானவை. முதலாம் வார்த்தையில் மன்னிக்க அழைப்பு விடுக்கிறார் இரண்டாம் வார்த்தையில் பாவமன்னிப்பின் நிச்சயத்தை பெற அறிவுறுத்தகிறார் மூன்றாம் வார்த்தையில் பொறுப்புள்ள வாழ்க்கை வாழ எச்சரிக்கிறார். நான்காம் வார்த்தையில் தந்தை - மகன் உறவு ஒளிவு மறைவு இன்றி இருக்க வேண்டும் என உணர்த்துகிறார். ஐந்தாம் வார்த்தையில் மனுமக்கள் மேல் வாஞ்சையுள்ளவராய் இருக்க விழைகிறார்.ஆறாம் வார்த்தையில் தந்தை தனக்காற்றிய பணியை நிறைவு செய்வதை விரும்புகிறார். ஏழாம் வார்த்தையில் தனது சரீரத்தை தந்தையிடம் ஒப்படைத்து விண்ணுலகில் பிரவேசிக்க அறைகூவல் விடுகிறார். அவர் உரைத்த பொன்மொழியை சிரம் மேற்கொண்டு செயல்பட்டு நித்திய ஜீவனைப் பெற்று வாழ்வில் ஒளிமயமான வாழ்வு வாழ்வோம்.


### துணைநூல்பட்டியல்

### முதன்மை ஆதாரம்

1. முனைவர். யோ. ஞான சந்திர ஜாண்சன், கிறித்தவச் சிற்றிலக்கியத் திரட்டு, ஆசியவியல் நிறுவனம், செம்மெஞ்சேரி, சென்னை

### துணைமை ஆதாரம்

1. பரிசுத்த வேதாகமம்
2. திருக்குறள்